05.08.2026

O.S.No.284/2017

DW1- செல்லத்துரை – த/பெ அய்யாச்சாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.08.2026

குறுக்கு விசாரணை : ( வாதிகள் தரப்பில்)

1. வழக்கானது பள்ளி நிர்வாகம், பள்ளி கட்டிடம் மற்றும் பள்ளி கட்டிடம் உள்ள இடம் ஆகிய மூன்றிற்கும் சேர்த்து தான் நடக்கிறது என்றால் சரியல்ல நிர்வாகத்திற்காக மட்டுமே தாக்கல் செய்துள்ளார்கள்.

2. தபசில் பள்ளியானது K.நவநீதிகிருஷ்ணாபுரம் ஊரில் கதவு எண்.2/199 சர்வே எண் 305/4 ல் உள்ளது என்றால் சரிதான்.

3. தபசில் பள்ளியும் அதன் நிர்வாகமும் ஆதியில் என் தந்தை அய்யாச்சாமிக்கு உரிமையானது என்றால் சரிதான்.

4. அய்யாச்சாமி தான் வழக்கு பள்ளியின் நிர்வாகி என்றால் சரிதான்.

5. வழக்கு பள்ளியை நானும் அம்பலவாணனும் செல்வராஜாவும் சேர்ந்து செல்வராஜாவிற்கு விற்பனை செய்ய ஒப்பந்தம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. சொத்து என் பெயரில் இல்லை.

6. கடந்த 11.04.2003 ம் தேதி அய்யாச்சாமி என்பவர் பள்ளி நிர்வாகம் மற்றும் பள்ளி சொத்தையும் செல்வராஜாவிற்கு ஒரு செட்டில்மென்ட் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தினார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

7. வழக்கு சொத்தை பொறுத்து நானும் என் அப்பா அய்யாச்சாமியும் சேர்ந்து செல்வராஜாவிற்கு ஒரு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்தோம் என்றால் இல்லை.

8. பள்ளி நிர்வாகத்தை என் தகப்பனார் வேண்டுகோளின் படி நான் 1 வருடம் மட்டும் நிர்வாகம் செய்தேன் என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ.4 ஆவணத்தில் நான் மாவட்ட கல்வி அலுவலருக்கு கொடுத்த கடிதத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் அவ்வாறு பரிந்துரை செய்யவில்லை.

10. கடந்த 01.01.2012 முதல் 31.12.2014 வரை 3 ஆண்டுகள் பள்ளி நிர்வாகியாக என்னை தேர்ந்தெடுக்க நான் 5,6 பிரதிவாதிகளுக்கு கொடுத்துள்ள ஆவணங்களில் உள்ள அம்பலவாணன், சங்கரி ஆகியோர்களின் கையொப்பத்தை நானே மோசடியாக போட்டு தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

11. 2002 முதல் 2017 வரை நான் தான் பள்ளி நிர்வாகியாக இருந்தேன் என்பதை காண்பிப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12. கடந்த 01.01.2015 முதல் 31.12.2017 வரை 3 ஆண்டுகள் பள்ளி நிர்வாகியாக என்னை தேர்ந்தெடுக்க நான் 5,6 பிரதிவாதிகளுக்கு கொடுத்துள்ள ஆவணங்களில் உள்ள அம்பலவாணன், சங்கரி ஆகியோர்களின் கையொப்பத்தை நானே மோசடியாக போட்டு தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

13. வழக்கு சொத்தை பொறுத்து நானும் என் மகன் சண்முக ஆனந்தும் சேர்ந்து இதே நீதிமன்றத்தில் அ.வ.528/2010 வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான்.

14. வழக்கு சொத்து பள்ளியும், நிர்வாகமும் என் அப்பாவிற்கு தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

15. என் அப்பா இறக்கும் வரை பள்ளி நிர்வாகத்திலோ, வழக்கு சொத்திலோ எங்களுக்கு தனிப்பட்ட உரிமை இல்லை என்றால் சரிதான்.

16. பள்ளி நிர்வாகம் குறித்து செல்வராஜ் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்து அதன் முடிவில் உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும் என உத்தரவு பகரப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. வழக்கு ஸ்ரீமுருகன் வித்யாலயம் பள்ளி நிர்வாகம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

18. செல்வராஜ் எத்தனை நாட்களாக பள்ளி நிர்வாகியாக இருந்தார் என்றால் 1 நாள் கூட நிர்வாகியாக இல்லை.

19. பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணமானது என் தந்தையால் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றும் உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என் தந்தையுடையது இல்லை என்றும் எனவே பி.வா.சா.ஆ.2 ஏற்கத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

20. பி.வா.சா.ஆ.2 ஏற்பட்ட தேதி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

21. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் முதல் சாட்சியாக கையொப்பமிட்டவர் யார் என்றால் என் சித்தப்பா துரைராஜ். உயில் சாட்சியாக உள்ள நபர்கள் மோசடியாக தயார் செய்யப்பட்டவர்கள் என்றால் சரியல்ல

22. பி.வா.சா.ஆ.3 உரிமை ஒப்பந்தத்தில் என் தந்தை தரப்பினராக உள்ளாரா என்றால் உள்ளார்.

23. பி.வா.சா.ஆ.3 உரிமை ஒப்பந்தத்தில் என் தந்தை கையொப்பம் இடவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 3 பள்ளி நிர்வாகத்திற்காகவும் வழக்கிற்காகவும் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

24. பி.வா.சா.ஆ.3 ஆவணமானது சட்ட வரன்முறைக்கு அப்பாற்பட்டு பள்ளி நிர்வாகத்தை மாற்றக்கூடாது என சங்கதிகள் உள்ளதால் பி.வா.சா.ஆ.3 சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

25. வழக்கு சொத்து பள்ளியையும், பள்ளி நிர்வாகத்தையும் என் அப்பா செல்வராஜா வசம் ஒப்படைத்துவிட்டதால் அதில் எனக்கோ என் அப்பாவிற்கோ எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

26. நான் பள்ளியின் நிர்வாகியாக இல்லாததால் நான் மட்டுமே பள்ளியின் நிர்வாகி என உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல.

27. நான் தமிழில் அ.செ.துரை என கையொப்பம் செய்வேன் என்றால் இல்லை.

28. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் சட்டப்படியான ஏற்கத்தக்க ஆவணம் என்றும் அதை மறுத்து நான் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல.

29. நான் செல்வராஜாவிற்கு பத்திரம் எழுதிக்கொடுத்தது போல் மோசடியாக தயார் செய்துவிட்டார்கள் என நான் கூறிய நிலையில் அது குறித்து நான் ஏதேனும் குற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனக்கு இப்போது தான் தெரியும் வழக்கு தாக்கல் செய்த போது தெரியாது. எப்போது தெரியும் என்றால் நீதிப்பேராணை தாக்கல் செய்த போது தான் தெரியும்.

30. செல்வராஜா மீது குற்ற வழக்கு உள்ளது என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக குற்ற வழக்கு உள்ளதாக கூறுகிறேன் என்றும் அவர் மீது எந்த குற்ற வழக்கும் இல்லை என்றால் சரியல்ல.

31. வழக்கு சொத்தை என் தகப்பனார் செல்வராஜாவிற்கு எழுதிக்கொடுத்த பிறகு அதனை ரத்து செய்யாமல் அதன் விவரங்களையும் உயில் ஆவணத்தில் குறிப்பிடாததால் மேற்படி உயில் ஆவணம் ஏற்கத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

32. மோசடியான உயில் ஆவணத்தின் அடிப்படையில் என் மகன் எனக்கு எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

33. வழக்கை தாக்கல் செய்வதற்கு 5,6 பிரதிவாதிகளிடம் அனுமதி பெறத் தேவையில்லை என்றால் சரியல்ல.

34. இவ்வழக்கின் 3,4 வாதிகள் 5ம் வாதி சங்கரியுடன் தான் சேர்ந்து உள்ளார்கள் என்றால் சரியல்ல.

35. நான் எப்போது பணி ஓய்வு பெற்றேன் என்றால் 28.02.2018ல் பணி ஓய்வு பெற்றேன். அதுவரை நான் என்ன பணியில் இருந்தேன் என்றால் கங்கணாங்கிணறு ஹரிசன் நடுநிலைப்பள்ளியில் நான் ஆசிரியராக பணிபுரிந்தேன்.

36. வேறு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்த நான் வேலை தாவா பள்ளியில் நிர்வாகம் செய்ய முடியாது என்றால் சரிதான் ஆனால் அனுமதி வாங்கினேன்.

37. 5,6 பிரதிவாதிகளிடம் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை நான் ஆசிரியராக பணிபுரிந்த பள்ளி நிர்வாகியிடம் அனுமதி பெற்றேன்.

38. வழக்கு சொத்து பள்ளியை நிர்வாகம் செய்வதற்கு கங்கணான்கிணறு ஹரிசன் பள்ளி நிர்வாகம் அனுமதி அளிக்க முடியாது

என்றும் 5,6 பிரதிவாதிகள் மட்டுமே அனுமதி அளிக்க முடியும் என்றால் சரியல்ல.

39. எனவே வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**5,6 தரப்பு குறுக்குவிசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
தென்காசி